## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

**அசல் வழக்கு எண். 30 /2019**

தேதி : 09.10.2023

பெயர் : N. நாராயணசாமி Pw3

குறுக்கு விசாரணை 09.10.2023

நான் சாட்சியம் சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி கேட்டுக்கொண்டதால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் வாதி ரங்கபாஷியத்திற்கும் மற்றும் 1ம் பிரதிவாதி தனஞ்செயத்திற்கும் அத்தை பேரன் ஆவேன். நான் தற்போது அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு உயர் அதிகாரிகளின் அனுமதி பெற்று வந்தேனா என்றால் இல்லை. நான் இதுவரை பல வழக்குகளில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அனுமதி எதுவும் இதுவரை பெற்றதில்லை. வாதி எனது நெருங்கிய உறவினர் என்பதால் பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது நெருங்கிய உறவினர்தான். வாதி அவரது குடும்ப சொத்து சம்மந்தமாக நிறைய வழக்குகள் தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்குகளின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் சொல்லிதான் வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன். வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே சொத்து பரிவர்த்தனையை யார் யார் முன்னிலையில் செய்தார்கள் எந்த இடத்தில் வைத்து செய்தார்கள் என்றால் வாதியும் 1ம் பிரதிவாதியும் அவரது தாய் மாமன் நந்தகோபால் முன்னிலையில் வாய்மொழியாக பரிவர்த்தனை செய்து கொண்டார்கள். 1ம் பிரதிவாதி தாவா சொத்தை பாலகிருஷ்ணன் என்பவருக்கு விற்பனை செய்ததற்கான ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் அவரது தந்தை எழுதிவைத்த உயில் ஆவணத்தின் அடிப்படையில் அவரவருக்கு கொடுக்கப்பட்ட சொத்தை அவரவர் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த காலத்திலும் எந்த பரிவர்த்தனையும்

நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு நெருங்கிய உறவினர் என்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது என்றால் சரியல்ல. வாதியுடன் கூட்டுசேர்ந்துகொண்டு பிரதிவாதிகளுக்கு எதிராக நான் சாட்சியம் சொல்ல வந்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**